**DEPOSITION OF WITNESS**
**IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, THIRUVIDAIMARUTHUR.**

Deposition of Witness for : PW-1
Date : 01.02.2024
Case No. : **O.S.338/2019**
Nationality : Indian
Name : ஹபீப்முகமது
Religion :
Father's/Husband's Name : உமர்கத்தாப்
Age : 70
Village :
Taluk :

வா.சா.1

சாட்சி சத்திய பிராமாணம் செய்து விசாரிக்கபடுகிறார்.

**3, 4 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை :-**

நான் என்ன பரிகாரம் கோரி வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் எனது சகோதரர் தாவா சொத்தை பொறுத்து பதிவு செய்த ஆவணத்தை ரத்து செய்ய கோரி இவ்வழக்கை தாக்கல் செய்துள்ளேன். அந்த ஆவணத்தின் ஆவண எண் தெரியுமா என்றால் ஆவண எண் ஞாபகமில்லை. 2015 ம் ஆண்டு பதிவு செய்யப்பட்டது. அந்த ஆவணம் யாரால் யாருக்கு எழுதி கொடுக்கப்பட்டது என்றால் எனது தகப்பனாரின் சொத்தை எனது சகோதரர் அவரது மனைவிக்கு செட்டில்மெண்ட் பத்திரம் எழுதி கொடுத்துள்ளார். நான் வழக்கினை பாகப்பிரிவினை கோரி தாக்கல் செய்துள்ளேனா என்றால் சரியல்ல. நான் எந்த காலங்களில் வெளிநாட்டில் இருந்தேன் என்றால் 1977 ம் ஆண்டிலிருந்து 2013 ம் ஆண்டு வரை வெளிநாட்டில் இருந்தேன். அதனை காட்டுவதற்கு எனது பாஸ்போர்ட் மற்றும் விசாவை நீதிமன்றத்தில் தாக்கல் செய்ய முடியுமா என்றால் முடியும். பாஸ்போர்ட் மற்றும் விசாவை நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. வேண்டும் என்றால் தாக்கல் செய்கிறேன். 1976 ம் வருடம் எங்கள் குடும்பத்தில்

ஒரு கரவோலை பத்திரம் ஏற்பட்டுள்ள விவரம் தெரியுமா என்றால் தெரியாது. அவ்வாறு கரவோலை எதுவும் கொடுக்கப்படவில்லை. என்னையும் 1ம் பிரதிவாதியையும் தவிர்த்து சம்சுநிஷா, உமருல்பஸ்ரியா, மும்தாஜ்பேகம், ஆசியாமரியம் ஆகிய வாரிசுகள் உள்ளார்கள் என்றால் சரிதான். அந்த வாரிசுகளை இவ்வழக்கில் தரப்பினர்களாக சேர்த்துள்ளேனா என்றால் இல்லை. எனது தாயார் உள்ளாரா என்றால் அவர் 2009 ம் ஆண்டு இறந்துவிட்டார். எனது தாயார் உயிருடன் இருந்தபோது நான் அவருடன் பேச்சுவார்த்தையில்தான் இருந்தேன். எனது தாயாருடன் எனக்கு எந்த மனவருத்தமும் கிடையாது என்றால் சரிதான். அவர் என் வீட்டில்தான் இருந்தார். எனது தாயார் எனது வீட்டில் இருந்திருந்தால் 1976 ம் ஆண்டு ஏற்பட்ட கரவோலை பத்திரத்தை பற்றி என்னிடம் சொல்லி இருப்பார் என்றால் அவர் கரவோலை பத்திரம் கொடுத்திருந்தால் சொல்லி இருப்பார்.

**3,4 பிரதிவாதிகள் தரப்பு வழக்கறிஞரின் வேண்டுகோளுக்கிணங்க குறுக்கு விசாரணைக்காக ஒத்தி வைக்கப்படுகிறது.**

x

Taken down by Typed to my dictation
in Open Court read over to the witness
admitted and acknowledged by
him/her to be correct.

Sd/- N. Sivapalani,
District Munsif cum Judicial Magistrate,
Thiruvidaimarudur.